[முற்பகல் 11-00]

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க எண் 5 சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 35/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்* என முன்மொழிகிறேன்.

1978-79 ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை அறிக்கையின் மீது எடுத்துப் பேசி விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்றிருக்கிறது. இவ்விவாதத்தில் பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, நிதி ஒதுக்க எண் 5 சட்ட முன்வடிவை விவாதம் எதுவும் இல்லாமலே நிறைவேற்றித் தருவார்களானால் எல்லோருக்கும் வசதியாக இருக்கும். பல மசோதாக்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. இது குறித்துப் பேச வேண்டிய கருத்துக்களை ஏற்கெனவே மனம் திருப்திப்படுகிற அளவுக்கு உறுப்பினர்கள் பேசி இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அல்லது இன்னும் சில புதிய கருத்துக்கள் இருக்கின்றன பேசுவதற்கு என்று உறுப்பினர்கள் விரும்புவார்களேயானால் தலைவர்கள் வரிசையிலே இருப்பவர்கள் மட்டும் தங்களது கருத்துக்களை எந்த அளவுக்குச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமோ அந்த அளவுக்கு சுருக்கமாகச் சொல்லி இந்த மசோதாவை நிறைவேற்றித் தரு மாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோருக்கும் தெரியும். அப்ராப்ரியேஷன் பில்களை சப்லி மெண்டரியின் மீது விவாதம் முடிந்ததற்குப் பின்னாலே நேராக நிறைவேற்றுவதுதான் மரபாக இருந்து கொண்டிருக்கிறது. தாங்கள் விரும்பினால் அப்படியே நிறைவேற்றலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஏற்கனவே என்னிடம் அந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். மற்ற தலைவர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன். திரு. சங்கரய்யா அவர்களிடமும் கேட்டேன். திரு. ஜேம்ஸ் அவர்களைக் கேட்டபோது அதைப் பற்றி ஒன்றும் விவாதிக்க வேண்டியதில்லை விட்டு விடலாம் என்று சொல்கிறார்கள். திரு. லத்தீப் அவர்கள் நமக்கு எப்போதுமே ஒத்துழைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள். நான் சில கருத்துக்களைச்

---

*1978 செப்டம்பர் 11ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

சொல்ல வேண்டி இருக்கிறது, ஆகவே அதற்கு அனுமதி வேண்டும் என்று சொன்னார்கள். அதனை மறுக்கின்ற தைரியம் எனக்கு இல்லை. உரிமை வழங்குகிற பொறுப்பு தங்களுடையது. திரு. சங்கரய்யா அவர்கள் இதனை வலியுறுத்துவது குறித்து எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் புதிதாக ஏதேனும் கருத்துக்களைப் பற்றி என்னிடம் சொன்னால் நான் அதனை முதலமைச்சருக்குச் சொல்லி காரியம் நடக்க ஏதுவாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து திரு. உமாநாத் அவர்களுக்கு விதி முறைகள் பற்றி நன்கு தெரியும். அடுத்து இப்போது நான் திரு. சங்கரய்யா அவர்களைப் பேச அனுமதித்தால் அவர்களைத் தொடர்ந்து எல்லோரும் பேசிக் கொண்டிருப்பார்கள். ஆகவே இங்கே இருக்கின்ற மரபைக் காக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் 8 மசோதாக்கள் இருக்கின்றன. ஆகவே திரு. சங்கரய்யா அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்ராப்ரையேஷன் பில்களிலே எப்போதுமே பேசுவதில்லை. நீங்கள் இதிலே பேசித்தான் ஆக வேண்டுமென்றால், உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தப் பொருள் குறித்து நிறையப் பேசியிருக்கிறார்கள். ஆகவே எல்லோரும் ஒத்துழைத்தால் நல்லது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மீது பேசி வீணாக நேரத்தைச் செலவழிக்க வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்படுகிறது ....

திரு. ரா. மார்க்கபந்து: தலைவரவர்களே, இதற்கு முன்னாலே நாங்கள் யாருமே பேசவில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே நான் திரு. மார்க்கபந்து அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் தொடர்ந்து திரு. மார்க்கபந்து அவர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டுதான் வருகிறேன். அது கேட்கக் கேட்க தித்திப்பாக இருக்கக்கூடிய அளவிலே இருந்தது. திரு. கந்தசாமி அவர்கள் மிகவும் ஆழமாக வேரூன்றக்கூடிய அளவிலே நிறையப் பேசி இருக்கிறார்கள். ஆகவே, இப்போது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துக்கொண்டதைப்போல் எல்லோரும் அவருடைய வழியைப் பின்பற்றி எங்களுக்கு ஒத்துழைப்பார்களேயானால் அது மிகவும் உதவியாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, அவ்வாறு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். எப்பொழுதுமே உறுப்பினர்களுடைய உரிமையினை நிலை நாட்டக்கூடிய அளவிலே பேசுகின்ற திரு. லத்தீப் அவர்களே அமைதியாக இருக்கும்போது திரு. கந்தசாமி அவர்கள் தயவு செய்து ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. லத்தீப் எழுந்தார்)

1978 செப்டம்பர் 13] [திரு. கி. மனோகரன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சங்கரய்யா அவர்கள் ஒத்துக்கொண்டார்கள், ஆகவே திரு. லத்தீப் அவர்களும் ஒத்துக் கொண்டு எங்களுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இதிலே பேச வேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை. பிடிவாதமும் செய்ய வில்லை. தாங்கள் துணை மானியக் கோரிக்கையிலே நாங்கள் பேச வேண்டும் என்று சொன்னபோது தாங்கள்தான் அப்ராப்ரியேஷன் பில்லிலே பேசலாம் என்று சொன்னீர்கள். அதனால்தான் நாங்கள் அன்றைக்குப் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பல மசோதாக்கள் வருகின்றன. அவற்றில் எதிலாவது பங்கு கொள்ளுங்கள். நெருக்கடியாக இருப்பதால் சொல்கிறேன். இதில் மட்டும் பொருத்தருளுங்கள்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களும் அவை முன்னவர் அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க சில பிரச்னைகள் இருந்தாலும் அவற்றைப் பற்றி இப்போது இங்கு பேசுவதற்கு நான் வற்புறுத்தவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி

"தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.5) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35 / 1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்ற பெற்று, சட்ட முன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 35/78) நிறைவேற்றப்பெற வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவை முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக ஆக்கப் பெற்றது.